**பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (செயற்திட்டம் - 1) - 2015**

---

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (செயற்திட்டம் - 1) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையே 2014 நவம்பர் 20 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட 47037 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலம் என்பன

நிகழ்ச்சித்திட்டத்தின் வசதி நிர்வாக கையேட்டின் பிரகாரம் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை அமுலாக்கல் முகவராக உள்ளது. தூய மின்வலு பிறப்பாக்கம், முறைமை வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையினை முன்னேற்றுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பிறப்பாக்கத்தினை அதிகரித்தல், பரிமாற்றல் உட்கட்டமைப்பை முன்னேற்றுதல், வலைப்பின்னல் வினைத்திறனை முன்னேற்றுதல் மற்றும் கேள்விப் பகுதி முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும்.

வசதி நிர்வாக கையேட்டின் படி, நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 28,509.80 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொ. 220 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 23,325.50 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொ. 180 மில்லியனை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திட்டம் - 1 இன் கீழ் நிதியளிப்புச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. நிகழ்ச்சித்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2014 நவம்பர் 20 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது. நிதியளித்தல் மூலங்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| **மூலம்** | **யூஎஸ்டொ மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி வங்கி | | |
| - சாதாரண மூலதன வளங்கள் கடன் | 121.00 | 15,680.40 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியம் | | |
| - கடன் | 29.00 | 3,758.10 |
| முகவர் அங்கீகார அபிவிருத்தி | | |
| - கடன் | 30.00 | 3,887.00 |
| இலங்கை அரசாங்கம் | 40.00 | 5,184.70 |
| | 220.00 | 28,509.80 |

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும்

நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் செயற்திட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) செயற்திட்ட உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) செயற்திட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடியும் என்றும்,

(ஈ) செயற்திட்ட உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மொரகல்ல நீர்மின்சார பொறியின் நிர்மாணத்திற்கான காணியினை கையேற்பதற்காக உட பளாத மற்றும் கங்க எஹல கோரலை பிரதேச செயலக பிரதேசங்களிலுள்ள குடியிருப்பாளர்களிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 6.20 மில்லியன் தொகையான பகுதிக் கொடுப்பனவுகள் முற்பணங்களாக கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக நடைபெற்றுவரும் வேலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மொரகல்ல நீர்மின்சார பொறியின் விபரமான வடிவமைப்பதற்காக ''நிலைபேறான மின்வலுத்துறை ஆதாரச் செயற்திட்டம்'' என்றழைக்கப்படும் ஏனைய நிதியளிப்பு உதவிச் செயற்திட்டத்தினால் 2014 இல் செலவிடப்பட்ட ரூபா 1.37 மில்லியன் தொகை 2015 இல் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும், மேற்குறிப்பிட்ட நிதியளிப்பு உதவிச் செயற்திட்டத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான ரூபா 2.94 மில்லியன் பெறுமானத்தேய்வுத் தொகையும் மீளாய்வாண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

**2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஒஎவ்பி/ஈஆர்டீ/2007/02 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மீளாய்வாண்டிற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள், 2016 யூன் 24 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2015 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | செயற்திட்ட உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற் கான மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். |
| ஏடீபீ | 180.00 | 23,326.20 | 4,361.00 | 0.80 | 110.00 | 0.80 | 110.00 |
| ஜீஓஎஸ்எல் | 40.00 | 5,183.60 | - | - | - | - | - |
| சீஈபீ | - | - | 541.00 | 1.40 | 176.70 | 1.60 | 205.00 |
| மொத்தம் | 220.00 | 28,509.80 | 4,902.00 | 2.20 | 286.70 | 2.40 | 315.00 |

### 3.2 பௌதீக செயலாற்றல்

(அ) கணக்காய்விற்குக் கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, மதியுரைஞர் ஒருவரை தெரிவு செய்வதில் தாமதம் காரணமாக, ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து 13 மாதங்கள் கடந்த பின்னரும் கூட மொரகொல்ல நீர்மின் பொறியின் சிவில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நீர்மின் பொறியின் நிர்மாணத்திற்கான காணிகளை கையேற்கும் நோக்கத்திற்காக 2014 நவம்பர் மாதத்தில் மொரகொல்ல பிரதேச செயலகத்திற்கு ரூபா 6.20 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் மீதான பௌதீக செயன்முன்னேற்றம் கணக்காய்விற்குக் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) கப்பற்துறை உப மின்நிலையத்தின் நிர்மாணித்தலிற்கான மற்றும் கெரவலபிடிய, கட்டுநாயக்க மற்றும் திருகோணமலை உப மின்நிலையங்களின் விரிவுபடுத்தலிற்கான ஒப்பந்த உடன்படிக்கைகள் 2015 திசெம்பர் 28 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் பரிமாற்று உட்கட்டமைப்பு இயலளவினை முன்னேற்றுதலின் கீழான கெஸ்பேவ மற்றும் களுத்துறை உப மின் நிலையங்களின் நிர்மாண வேலைகள் மற்றும் அநுராதபுரம் புதிய உப மின் நிலையத்தின் விரிவாக்கல் போன்ற ஏனைய நிர்மாண வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் ஆரம்ப கட்டத்திலேயே காணப்பட்டன.

(இ) நடுத்தர வொல்டேஜ் வலைப்பின்னல்கள் வினைத்திறன் முன்னேற்ற மற்றும் எரிசக்தி வினைத்திறனுக்கான கேள்வித் தள முகாமைத்துவ முன்னேற்ற நோக்கங்களிற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் ஏனைய செயற்பாடுகள், நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு 01 ஆண்டு கடந்த பின்னரும் கூட ஆரம்ப கட்டத்திலேயே காணப்பட்டன.

### 3.3 நிதிக் கட்டுப்பாட்டு விடயங்கள்

நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகளின் அமுலாக்கல் மீதான பொறுப்பு பகிரப்பட்டு, நிதியளித்தல் உதவிச் செயற்திட்டங்களின் அமுலாக்கலிற்கு பொறுப்புடையதாக தாபிக்கப்பட்ட பிரிவிற்கு அச்செயற்பாடுகளை ஒப்படைப்பதற்குப் பதிலாக இலங்கை மின்சார சபையின் 03 பிரிவிகளிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆகையால், நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகளை கண்காணிப்பதற்கும் அவ்வாறான செயற்பாடுகளின் பௌதீக செயன்முன்னேற்றம் தொடர்பான தகவல்களை வழுங்குவதற்கும் பொருத்தமானதோர் பொறிமுறை மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.